# வெள்ளப் பாதிப்புக்குப் பின்னர் அதிகரிக்கும் வாடிக்கையாளர்கள்: 20 நாள்களில் 1.20 லட்சம் பிஎஸ்என்எல் "சிம் கார்டு'கள் விற்பனை

By பா.சேதுராமன், சென்னை,

**First Published : 25 December 2015 01:43 AM IST**

தமிழகத்தில் வெள்ளப் பாதிப்புக்குப் பிறகு, கடந்த 20 நாள்களில் மட்டும் 1.20 லட்சம் பிஎஸ்என்எல் "சிம் கார்டு'கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அண்மையில் பெய்த பலத்த மழை, வெள்ளப் பெருக்கின்போது சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர் உள்ளிட்ட பல மாவட்டங்களில் மின்சாரம் தடைபட்டதோடு, தொலைத் தொடர்பு கோபுரங்களும் (டவர்) சேதமடைந்தன. இதனால், பெரும்பாலான தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களின் சேவை தடைபட்டது. அப்போது பிஎஸ்என்எல் மட்டும் சிறப்பாக இயங்கியது.

இதனால் பிஎஸ்என்எல் செல்லிடப்பேசி சிம்கார்டுகள் விற்பனை அதிகரித்துள்ளது.

20 நாள்களில் கூடுதலாக 42 ஆயிரம்: இதுகுறித்து, "தினமணி'யிடம் தமிழக தொலைபேசி வட்ட உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது: வெள்ளப் பாதிப்புக்குப் பின்னர், பிஎஸ்என்எல் "சிம் கார்டு'களை வாங்கும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தமிழகத் தொலைபேசி வட்டத்தில், மாதம் ஒன்றுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் "சிம் கார்டு'கள் வரை விற்பனையாகும். வழக்கமாக, நாள் ஒன்றுக்கு 4 ஆயிரம் "சிம் கார்டு'கள் விற்பனையாகும்.

ஆனால் மழை, வெள்ளப் பாதிப்புக்குப் பின்னர், நாள் ஒன்றுக்கு 6 ஆயிரம் "சிம் கார்டு'கள் விற்பனையாகி வருகின்றன. தமிழகத்தில் வழக்கத்தைவிட, கடந்த 20 நாள்களில் மட்டும் கூடுதலாக

42 ஆயிரம் "சிம் கார்டு'கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அதாவது, இந்த 20 நாள்களில் மொத்தம் 1.20 லட்சம் "சிம் கார்டு'கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தற்போது, சிம்கார்டுகள் விற்பனை 50 சதவீதம் வரை அதிகரித்துள்ளது என்றார் அவர்.

இதேபோல, சென்னை தொலைபேசி வட்டத்தில் கடந்த 20 நாள்களில் மட்டும் புதிதாக 10 ஆயிரம் செல்லிடப்பேசி வாடிக்கையாளர்கள் இணைந்துள்ளனர் என, சென்னை தொலைபேசி வட்டத் தலைமை பொது மேலாளர் எஸ்.கலாவதி தெரிவித்தார்.

thinamani 25 -12- 2015